**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு நாற்காலிகள் வழங்கும் திட்டம்– 2014–15ம் ஆண்டிற்கான தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்வது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந. 2.1)த் துறை

அரசாணை(நிலை) எண். 24 நாள்: 30–03–2015

ஜய, பங்குனி 16,

திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.09, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்28–02–2014.
2. அரசு கடிதம் எண்.6189/மா.தி.ந.2.1/2014, நாள் 1.8.2014
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.1932/இவாததி1/ 2014, நாள் 04.02.2015.

----

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2013–14 ஆம் நிதியாண்டில், மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட மடக்கு சக்கர நாற்காலிகள் (CP Chair) ஒன்றின் விலை ரூ.6,000/– என்ற வீதத்தில், 450 எண்ணிக்கையில் வாங்கி வழங்கிட ரூ. 27.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் 2013–2014 ஆம் நிதியாண்டிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை ரூ.27.00 இலட்சத்தை, 2014–15 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

3. மேலே, மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2014–15 ஆம் நிதியாண்டில் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு, 500 எண்ணிக்கையிலான மாற்றி வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் வாங்கி வழங்கிட ரூ.30,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த பின்பு, அதனை ஏற்று, மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டத்தை 2014–2015 ஆம் ஆண்டில் தொடர தொடராணையும், ரூ.9,00,000/– (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(i) மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட மடக்கு சக்கர நாற்காலிகள் (CP Chair) ஒன்றின் விலை ரூ.6,000/– என்ற வீதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வைத்திருப்போருக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும், மருத்துவ சான்று மட்டும் போதுமானதல்ல.

(ii) மடக்கு சக்கர நாற்காலிகளை (CP Chair) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி, திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்திட அனுமதிக்கப்படுகிறது. ஒரு மடக்கு சக்கர நாற்காலி ரூ.6,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

(iii) மேலும், இத்திட்டத்திற்கென கோரப்பட்ட தொகையான ரூ.30.00 இலட்சத்தில் மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.9,00,000/– போக, மீதித் தொகையான ரூ.21,00,000/–ஐ 2015–2016 ம் ஆண்டு திருத்திய / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக, அரசுக்கு கருத்துரு அனுப்பி பெற்றுக் கொள்ளுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையை, தமிழ்நாடு நிதி விதித் தொகுதி–I, விதி 99ன்படி முன்பணமாக பெற்றுக் கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235–சமூக பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் –101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – I– திட்டம் சாராதது–CO- மாற்றத் திறனாளிகள் மறுவாழ்வு திட்டம்–19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்".

(து.தொ.கு 2235–02–101–CO-1917)

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.10669/நிதி(சந)/2015, நாள்27–03–2015 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர்(துணிக்கை), தலைமைச் செயலகம், சென்னை–9.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.

<u>நகல்:-</u>
நிதித்(சந) /வ.செ.பொது–I)துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள்நலத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.